திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல் எல்லாம் நடந்த பிறகு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஒரு ஆலோசனைக் குழுவைப் போடப் போவதாகச் சொல்கிறார்கள். இவ்வாறு மசோதா கொண்டு வருவது தேவையற்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தினை ஆரம்பத்திலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். ஏனென்றால், எலக்டட் பாடி செய்ய வேண்டிய காரியங்களை எக்ஸிகியூட்டிவ் பாடிகளைக்கொண்டு செய்விக்கின்ற வகையில் இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர் மற்றும் அடிஷனல் டெவலப்மெண்ட் ஆபீசர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். என்ன பொறுப்பை என்றால் வைஸ் சேர்மேனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை................

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலே சொன்ன மாதிரி அப்போஸ் மட்டும் பண்ணிவிடுங்கள். டிஸ்கஷன் ஸ்டேஜ்லே நிறைய பேசலாம்...........

திரு. ப. பொன்னுரங்கம்: ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி யாக வேண்டும். சொல்லாமல் அப்போஸ் பண்ண முடியாது. இங்கே நாம் உதாரணமாக சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கிறோம். துணைத் தலைவரையும் பேனல் ஆப் சேர்மேனையும் அவர்தாம் தேர்ந்தெடுக்கிறார். செக்ரட்டரியிடமா விடுகிறோம். ஆகவே, ஜனநாயகத்திற்கு விரோதமான இந்தச் சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். ஏனென்றால் ஏற்கெனவே சில பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர்கள் துணைத் தலைவர்கள் தேர்தல் நடந்து முடிந்துவிட்டன. அந்தத் தேர்தலை என்ன செய்யப் போகிறீர்கள், அதன் மீது என்ன நடவடிக்கை என்பதைப் பற்றியெல்லாம் இதில் குறிப்பிடவில்லை. ஆகவே, ஆரம்ப நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு அவர் இதில் தலைமை தாங்க முடியாத நிலை என்பது இதில் ஒன்று. இரண்டாவது கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் இதற்குத் தலைமை தாங்க வேண்டும் என்பது. அப்படியானால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இதைப் பொறுத்தவரையில் எந்தவித பிரயோஜனமும் இல்லாமல் அவர்களுடைய நடவடிக்கை தடுக்கப்படுகிறது. அவருக்குப் பதிலாக அங்கே இருக்கிற ஒரு அதிகாரியைக் கொண்டு துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை சரியல்ல. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் சரியாக நடக்கவில்லை தவறு நடந்துவிட்டது என்று இப்படிக் கொண்டுவருவது சரியல்ல. அப்படி தவறு நடந்திருந்தால் அதில் நடவடிக்கை எடுத்து அதை ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டுமே தவிர அதை விட்டுவிட்டு இது மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தலைமை தாங்கக் கூடாது என்று சொல்லுவது சட்ட விரோதமானது...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையெல்லாம் டிஸ்கஷனிலே பேசுங்கள். இப்போது விளக்கம் எதற்கு?

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, அதன் விரிவான விளக்கத்திற்குள் நான் வரவில்லை. அந்த விளக்கத்தைச் சொல்லித்தான் எதிர்க்க வேண்டியிருக்கிறது. அது ஒரு

(திரு. கு. ரமணி) [1986 மே 13

டெமாக்ரடிக் பிராஸஸ். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர்கள் என்ன ஆவது? அப்படி தலைவரால் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களையெல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள்? அவைகளை ரத்து செய்யப்போகிறீர்களா? அது பற்றி ஒன்றுமே இதில் இல்லை. இது சட்ட விரோதமானது. அப்படி சட்ட விரோதமாகக் கொண்டு வரப்படுகிறது என்பதனாலேயே இதை இன்டிரொடக்டரி ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவினை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மன்றத்தின் தலைவர்தான் அந்தத் தேர்தலை நடத்த வேண்டும். அதுதான் நியாயம். ஆனால், இந்தச் சட்ட முன்வடிவு அந்த நியாயத்திற்கு விரோதமாகக் கொண்டு வரப்பட்டிருப்பதால், அதை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, எதிர்த்து அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஒரு அரசு என்று சொல்லப்பட்டு வந்த நிலை இன்றைக்கு கேலிக் கூத்தாக மாறி வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தலைவர் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக அதிகாரிகள் துணைத் தலைவர் தேர்தலுக்கு தலைமை தாங்க வேண்டும் என்று ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிற இந்த ஆட்சி படிப்படியாக அதிகாரிகளால் ஆட்டிப்படைக்கப்படுகிற சர்வாதிகாரத்திற்கு நாட்டை ஒப்படைத்துவிடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆள்வதை, தலைமை தாங்குவதை கேலிக்கூத்தாக ஆக்குவதற்குத்தான் இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். இது நல்லது அல்ல. இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது ஆரம்ப நிலையிலேயே என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தலைவர், துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதைவிட, தலைவரை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய, புதிய ஜனநாயக மரபைக்கொண்டு வர வேண்டிய இந்த அரசு, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருடைய அதிகாரத்தையே குறைப்பதற்காக இப்படி ஒரு சட்ட முன்வடிவினைக் கொண்டுவந்திருப்பதை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தத்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஊ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 11—00)

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.